International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 02 Issue: 04 October to December 2020 www.irjtsjournal.org

# இலங்கையின் இசைக்கலை வளர்ச்சியில் பத்திரிகை ஊடகங்களின் பங்கு - ஈழகேசரிப் பத்திரிகையினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு -

முனைவர் (திருமதி) சுகன்யா அரவிந்தன்,
*முதுநிலை விரிவுரையாளர்,*
*இசைத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
*இலங்கை.*

**ஆய்வுச்சுருக்கம்.**

இலங்கையிலே ஒருகாலத்திலே கிபி 19ம் நூற்றாண்டின் ஆரம்பகாலகட்டங்களிலே இசைக்கலையானது பெரும்பாலும் ஆலய வழிபாடுகளுடனும் சடங்குகளுடனும் பொருந்தி வளர்ந்திருப்பதைக் காலந்தோறும் நாம் பதிவுகளிலிருந்து கண்டுகொள்ளமுடிகின்றது. ஏறக்குறைய இலங்கையில் ஏறக்குறைய 1930களிலிருந்து இலங்கை வாழ் தமிழ்மக்களிடையே கலைசார் விழிப்புணர்வு ஒன்று ஏற்பட்டிருந்ததை வரலாறுகள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது. இந்த நிலையிலே ஊடகங்களின் பங்களிப்பு கலை வளர்ச்சியிலே பெரிய பங்கு வகித்திருக்கின்றது என்பதனை அவற்றின் செயற்பாடுகள் வாயிலாகவும் பதிவுகள் வாயிலாகவும் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

பொதுவாகப்பத்திரிகைகள் அரசியல், பொருளாதாரத்துறைசார்ந்த செய்திகளோடு வெளிவருவதே மரபு. இஅந்த நிலை சற்று மாற்றம் பெற்று தமிழ்ப்பண்பாட்டையும் மொழியையும் காப்பதற்கான முயற்சிகளை முதன்மைப்படுத்தி ஈழகேசரி என்கின்ற பத்திரிகை 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே இலங்கைத்தமிழ்ச்சமூகத்தின் மத்தியிலே வெளிவந்தது. இந்தப்பத்திரிகை தமிழ்ப்பண்பாட்டிலே முக்கியமாகக் கருதப்படுகின்ற இசைக்கலையின் வளர்ச்சிக்கும் சமூகமயமாக்கலுக்கும் எவ்வாறு செயற்பட்டது என்பதை வாய்ப்புப்பார்ப்பதாகவே இவ்வாராய்ச்சிக் கட்டுரை எழுதப்பட்டிருக்கின்றது.

**அறிமுகம்:**

இலங்கையிலே ஒருகாலத்திலே அதாவது கிபி 19ம் நூற்றாண்டின் ஆரம்பகாலகட்டங்களிலே இசைக்கலையானது பெரும்பாலும் ஆலய வழிபாடுகளுடனும் சடங்குகளுடனும் பொருந்தி வளர்ந்திருப்பதைக் காலந்தோறும் நாம் வரலாற்றுப்பதிவுகளிலிருந்து கண்டு கொள்ள முடிகின்றது.

இலங்கையில் ஏறக்குறைய 1930களிலிருந்து இலங்கை வாழ் தமிழ்மக்களிடையே கலைசார் விழிப்புணர்வு ஒன்று ஏற்பட்டிருந்ததை முன்னைய ஆய்வுகளின் முடிவுகள் வாயிலாகத் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

இந்த நிலையிலே ஊடகங்களின் பங்களிப்பு கலை வளர்ச்சியிலே பெரிய பங்கு வகித்திருக்கின்றது என்பதனை அவற்றின் செயற்பாடுகள் வாயிலாகவும் பதிவுகள் வாயிலாகவும் தெரிந்து கொள்ளமுடிகின்றது.

இந்தநிலையிலே இலங்கைத்தமிழ்ப் பண்பாட்டினரின் மத்தியிலே சிறப்பாக வெளிவந்த ஈழகேசரி என்கின்ற நாளிதழ் (பத்திரிகை) இசைக்கலைக்கு ஆற்றிய பணிகள் முக்கியமானவையாகக் கொள்ளப்பட்டு: இங்கு ஆய்வு செய்யப்படுகின்றது. இந்நிலையிலே இசைக்கலைவளர்ச்சிக்கு இப்பத்திரிகை எத்துணை பங்களிப்பினை வழங்கியிருக்கின்றது என்பதனை தெளிவாக ஆராய்ந்து விபரிப்பதாகவே இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**

***ஊடகம், இசைக்கலை வளர்ச்சி, இரசனை மட்டம், இசை அனுபவம்,சமூகமாற்றம்***

**ஆய்வின் பின்னணி**

இலங்கையின் இசைக்கலை வரலாற்றினை நோக்கின் கிபி 19ம் நூற்றாண்டு காலப்பகுதிகளிலே இசைக்கலையானது கூத்து மரபு, இசைவேளாள மரபு, ஓதுவார் மரபு, பிரசங்க மரபு, வேதாசியர் மரபு எனப்பல தளங்களிலே வளர்ந்து வந்திருக்கின்றது. ஆனால் பின் வந்த காலங்களிலே இசைவேளாளரினதும், இசைநாடகக்காரரினதும் அதிகப்படியான சமூகப்பரவலாக்கத்தின் காரணமாக கர்நாடகஇசை எனப்படுகின்ற செந்நெறிப்படுத்தப்பட்ட இசைக்கலை வடிவமானது இலங்கைத்தமிழ்ச்சமூகத்தினரிடையே முதன்மை பெறுகின்றது. பலரும் தமிழகத்திலே இருக்கக்கூடிய அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலே கற்று ‘சங்கீதபூஷணங்களாக’ மீண்டனர். இவர்கள் தாம் கற்றவற்றை மீள்கையளிப்புச்செய்யவும் தொடங்கினர். இந்நிலையிலே சாஸ்த்திரிய சங்கீதம் பற்றிய ஒரு விழிப்புணர்வு மக்களுக்கு வழங்கப்படவேண்டிய தேவையினை சில இசைப்பற்றாளர்கள் உணர்ந்து இதற்கான வழியினை தொலைத்தொடர்பு சாதனங்களின் துணையுடன் செயற்படுத்த விளைந்தனர்.

இந்த வரலாற்றுப்பின்னணியிலே நின்றுகொண்டு பத்திரிகைத்துறையிலே 1930களிலிருந்து செயற்பட்டு வந்த ஈழகேசரிப்பத்திரிகையின் இசைப்பணிபற்றி இங்கு ஆராயப்படுகின்றது.

**ஈழகேசரி – ஓர் அறிமுகம்.**

1930 தொடக்கம் சுமார் 28 வருடங்கள் ஈழகேசரி என்கின்ற பத்திரிகை இலங்கையிலே சிறப்பாக வெளிவந்திருக்கின்றது என்பதை இப்பத்திரிகையின் வரலாற்றுப்பதிவுகள் வாயிலாகத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

“நமது நாடு அடிமைப்படுகுழியிலாழ்ந்து, அன்னியர் வயப்பட்டு, அறிவிழந்து, மொழி வளங்குன்றி, சமயமிழந்து, சாதிப்பேய்க்கோட்பட்டுச் சன்மார்க்க நெறியிழந்து, உன்மத்தராய், மாக்களாய், உண்டுறங்கி வாழ்தலே கண்டகாட்சியெனக் கொண்டாடுமிக்காலத்தில் எத்தனை பத்திரிகைகள் தோன்றினும் மிகையாகாது” என்று தனது முதலாவது இதழிலேயே பத்திரிகை வெளிவருவதற்குரிய நோக்கத்தின் தெளிவுபடுத்தல்களோடு‘ஈழகேசரி’ என்கின்ற பத்திரிகை நாளாந்தம் வெளிவரத்தொடங்கியது.

இதனைத் தோற்றுவித்தவர் திரு. நா. பொன்னையா என்கின்ற தேசப்பற்றாளர் ஆவார். ஈழகேசரிப் பத்திரிகை வாயிலாக தமிழ்மொழிக்கும், தமிழர்தம் பண்பாட்டுக்கும் பொன்னையா அவர்கள் பெரும்பணியாற்றியிருக்கின்றார். இதன் சிறப்புக்காரணமாக இலங்கையின் வடபுலமாகிய யாழ்ப்பாணத்திலே இருக்கின்ற சிற்றூராகிய குரும்பசிட்டியைச் சேர்ந்த இவர் “ஈழகேசரி நா.பொன்னையா” என்று தமிழுலகம் நினைவுகூரக் காரணமானார்.[1]

**ஈழகேசரியின் பொதுப்பணிகள்.**

ஒரு பத்திரிகைக்குரிய தர்மத்தோடு நாளாந்தம் சிறப்புடன் ஈழகேசரி வெளிவரத்தொடங்கியது. ஆரம்பத்திலேயே பத்து பக்கங்களைக்கொண்டு அமைந்திருந்த பத்திரிகை காலப்போக்கிலே மேலும் பல பக்கங்ளை இணைத்துக்கொண்டது. இலங்கையிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே தமிழ்ப்புலம் சார்ந்த செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது, இது மாத்திரமல்லாமல் நாளாந்த செய்திகள் என்பதற்கப்பால் தமிழ்மொழி காக்கும் பத்திரிகையாகவே பெரும்பாலும் செயற்பட்டது என்பதற்கு அக்கால பத்திரிகைகளது பிரதிகள் சான்றுகளாக அமைகின்றன. தமிழ் மொழி, பண்பாடு பற்றிய கட்டுரைகள், விமர்சனங்கள், நூல் அறிமுகங்கள் மற்றும் தமிழ்ப்பெரியார்கள், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர். பொன். இராமநாதன் போன்றோரது வாழ்வியல் குறிப்புக்கள் எனப் பல தமிழ்ப்பண்பாடு சார்ந்த தகல்களை மக்களுக்குப் பரப்புரைசெய்வதிலே இப்பத்திரிகை முனைப்பாக செயற்பட்டது என்றே கூறலாம்.

**ஈழகேசரியின் இசைப்பணிகள்:**

ஒரு பத்திரிகையானது பொதுவாக சமூகத்திலிருக்கக்கூடிய அரசியலையும் ஏனைய அறிவித்தல் விடயங்களையுமே பிரசுரிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கக்கூடிய நிலையிலே இசைக்கலை பற்றிய கட்டுரைகளையும் இசைதொடர்பான பல விடயங்களையும் தினசரி நாளிதழிலே பிரசுரித்த ஒரே பத்திரிகையாக ஈழகேசரி பத்திரிகையை மாத்திரமே குறிப்பிட முடியும்.

ஈழகேசரி வெளிவந்த காலத்தின் அடிப்படையிலே நின்று நோக்கும்போது இலங்கையின் தமிழ்ப்பண்பாட்டிலே ஆலய வழிபாடுகளிலும் கதாப்பிரசங்கங்கம் மற்றும் புராணபடனம், சின்னமேளம், இசைநாடகம் போன்ற ஆலயம் சார்நிலையிலேயே இசைக்கலையும் வளர்ந்த சந்தர்ப்பங்களைக்கண்டுகொள்ள

முடிகின்றது. இந்தக்கலைவடிவங்கள் அதிகளவில் பயன்பாட்டில் இருந்த இலங்கையின் வடபுலமாகிய யாழ்ப்பாணத்திலே சில பிரதேசங்களிலே சமூகங்களுக்கடையேயான பிரதேசவாதத்தினையும் சாதியத்தையும் இக்கலைகள் குறித்து நிற்கத் தொடங்கின என்றும், இது பல சமூகச்சிக்கல்களை ஏற்படுத்தியிருந்தது என்றும் பேராசிரியர் கா சிவத்தம்பி அவர்கள் தனது கட்டுரையிலே குறிப்பிட்டுச்செல்கின்றார்.[2]

பின் 1930களின் இறுதியிலே இலங்கைக்கு ரவீந்திரநாத் தாகூர் மற்றும் அவரது குழுவினரின் வருகையும், அதன் மூலம் சமூகத்திலே ஏற்பட்ட கலைகள் சார்ந்த விழிப்புணர்வும், முயற்சிகளும் இசைக்கலையை சமூகத்திலே தரமுயர்த்துவதற்கான செயற்பாடுகளை இலங்கைத் தமிழ் சமூகத்தினரிடையே ஏற்படுத்தியிருந்தன.3 (ஈழகேசரி : 07-12-47)

இந்நிலையில் தான் இசையின் மீதுஆர்வம் கொண்டோர் தமிழகம் சென்று அண்ணாமலைப்பல்கலைக்கழகத்திலே இணைந்து இசைபயின்று தாயகம் மீண்டனர். இந்நிலையில்இலங்கையிலே யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு வெளிவந்த தமிழ்ப்பத்திரிகையான ஈழகேசரியும் இசைக்கலையானது சமூகத்திலே யாவர்க்குமுரிய கலையாக மாற்றம்பெறவும், விரும்பியோர் யாவருக்கும் இசைப்பாடங்கள் கிடைக்கும் வகையிலும், சின்னமேளம், கதாப்பிரசங்கம் போன்ற கலை வடிவங்களிலே ஊறிக்கிடந்தோரை சமநிலைப்படுத்தி ஒரு செந்நிலைசார்ந்த கலைடிவத்தினை ரசிப்பதற்கு ஏற்றவர்களாக தரமுயர்த்துவதிலும் தன்னாலான பணிகளைச் செய்தது என்றால் மிகையாகாது.

அந்நாட்களிலே எங்கு இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் அதை விளம்பரப்படுத்துவதிலே முனைப்பாக ஈழகேசரிப்பத்திரிகை செயற்பட்டது. எடுத்துக்காட்டாக தமிழகம் சென்று 'சங்கீதபூஷணங்களாக' திரும்பியவர்களது முன்னெடுப்பிலே முன்முயற்சியாக சற்குரு ஸ்ரீ தியாகராஜ ஆராதனை விழா மிகப்பெரியளவிலே ஏற்பாடுகள் செய்யப்பட்டு 1948களில் முதன்முறையாக இலங்கையிலே நடத்தப்பட்டது. திருவுருவப்பட ஊர்வலமும் பஞ்சரத்ன ஆராதனையும் கச்சேரிகளுமாக தியாகராஜ உற்சவம் இலங்கையிலே ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதன் முதலாக கலாபவனக் குழு கொழும்பு பிற்றேஸ் கல்லூரி மண்டபத்திலே 17.01.1948 அன்று இடம் பெற்றது.4(ஈழகேசரி - 17.01.48 - கலாபவனம் கட்டுரை)மற்றும் அதேகாலத்தில் 30.01.40 யாழ்ப்பாணத்திலும் தியாகராஜ உற்சவம் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. இவ்விழா பற்றிய தகவல்களையெல்லாம் ஈழகேசரி பத்திரியை அவ்வப்போது முறையாகப்பிரசுரித்து வந்திருக்கின்றது.

பொதுவாக இந்தக் கால கட்டங்களிலே பாடசாலை மட்டத்திலே பல கலை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களை கண்டு கொள்ள முடிகிறது. இந்த மாதிரியான கலாசார நிகழ்வுகளிலே கலை நிகழ்வுகளை, குறிப்பாக கதாப்பிரசங்கங்கள் கூட கல்லூரி மாணவர்களே முன்னெடுக்க வழிப்படுத்தபட்டனர். விபுலானந்தர் விழா, அருணகிரிநாதர் விழா போன்ற பல்வேறு விழாக்கள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர்களது நிகழ்வுகள் மட்டுமல்லாமல் தமிழகத்திலிருந்து கலைஞர்கள் பலரும் பாடசாலை நிகழ்வுகளுக்காக அழைக்கப்பட்டிருந்தனர். எடுத்துக்காட்டாக விபுலானந்த முத்தமிழ் மாநாட்டுக்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு.க.பொ. சிவானந்தம் பிள்ளை அவர்கள் வீணை நிகழ்ச்சிக்காகவும், திரு. பி.எஸ்.வேதாசலம் செட்டியார் அவர்கள் சங்கீத நிகழ்ச்சிக்காகவும் வரவழைக்கப்பட்டிருந்தனர்.5 (ஈழகேசரி: 6.6.48) அவ்வாறே 13.06.48 அன்று யாழ்ப்பாணத்திலே இசைக்கலைஞர்கள் செறிந்த வாழுகின்ற கிராமமாகின இணுவில் பகுதியை அண்டிய பிரதேசமாகிய மருதனார்மடத்திலே ஸ்ரீ.எஸ். நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் நிகழ்ந்த அருணகிரியார் விழாவுக்கு சொற்பொழிவுக்காக ('கர்நாடக சங்கீதத்தின் இன்றைய நிலை' என்னும் தலைப்பிலே பேசப்பட்டது) தமிழகத்தைச் சேர்ந்த திரு. ஸ்ரீ ராஜ அரியரத்தினம் அவர்களும், திருப்புகழ் கச்சேரிக்காக சங்கீதபூஷணம் வி. கனகசுந்தரம் அவர்களும், கதாப்பிரசங்கத்திற்காக ஸி.எஸ்.என் மணிஐயரையும் ஏற்பாடு செய்து நிகழ்ச்சிகளை நிகழ்த்தியிருக்கின்றமையை அறிய முடிகின்றது. (பத்திரிகை இதுபோலவே நிதி திரட்டும் நிகழ்ச்சிகளுக்காகத் தென்னிந்திய கலைஞர்களை இங்கு வரவழைக்கும் செயற்பாடுகள் அடிக்கடி நிகழ்ந்தேறின. யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி கட்டட நிதிக்காக தென்னிந்திய இசைவித்தகி எம்.எல். வசந்தகுமாரி அவர்களும், அவருக்கு அணிசெய் கலைஞர்களாகத் தென்னிந்தியாவிலிருந்தே வரவழைக்கப்பட்ட திருப்பாபுலியூர் வி. இராஜம் ஐயர் - பிடில், தஞ்சாவூர் ஸ்ரீ. ரி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி ராவ் - மிருதங்கம், திருவில்வாமலை ஸ்ரீ ரி.எஸ். வில்வாத்தி ஐயர் கடம் -6 (ஈழகேசரி : 11.8.46)

1940 களில் முதன்மையாக வெளிவந்த ஈழகேசரி பத்திரிகை ஒவ்வொரு வாரமும் சங்கீதத்திற்கென ஒரு பகுதியை அமைத்து கர்நாடக சங்கீதக் கீர்த்தனைகளை ஸ்வரசாகித்ய விளக்கங்களுடன் அந்த கீர்த்தனத்துக்குரிய முக்கிய குறிப்புக்களுடன் சேர்த்து வெளியிட்டு வந்தது. கோபாலகிருஷ்ணபாரதி, வேதநாயகம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் போன்றோரின் பல கீர்த்தனைகள் ஸ்வர தாளக்குறிப்புக்களோடு பிரசுரிக்கப்பட்டது. இதற்குப் பொறுப்பாக மூர்த்தி ஐயர் பொறுப்பாக இருந்தார்.7(ஈழகேசரி : 5-7-42)

எடுத்துக்காட்டாக 'வருவாய் வருவாய் வருவாய் கண்ணா' என்கின்ற சுப்பிரமணிய பாரதியின் பாடலை காபி ராகத்தில், ஆதி தாளத்திலே ஸ்வரப்படுத்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்தப் பாடலின்கீழ் ஒரு குறிப்பு மூர்த்தி ஐயர் அவர்களால் பின்வருமாறு கொடுக்கப்பட்டிருந்தது.

***குறிப்பு*** : தற்கால நடைமுறையில் அனேக வித்துவான்கள் இந்த ராகத்தில் காகலி நிஷாதப் பிரயோகங்களை இராக ரஞ்சனமான பிரயோகங்களாகக் கருதிக் கையாண்டு வருகிறார்கள். இதை அனுசரித்தே கீழ் காணும் கீர்த்தனையிலும் சில காகலி நிஷாதப்பிரயோகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.8 (ஈழகேசரி –12-7-42)

இவை தவிர 1940களிலே இலங்கை வானொலி சேவையும் தன்னாலான இசைப்பணியாற்றிவந்திருக்கின்றது. உள்ளூர்க்கலைஞர்களது இசைக்கச்சேரிகளை ஒலிபரப்புச்செய்ய ஆரம்பித்திருந்தது. இந்நிலையிலே அந்நிகழ்ச்சிகளது விமர்சனங்களை ஈழகேசரி வாராவாரம் உரியவர்களைக் கொண்டு தயார் செய்து 'ரேடியோ விமர்சனம்' என்கின்ற பகுதியிலே பிரசுரித்தது. இது கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒரு விடயமாக இருந்தது. கலைஞர்கள் தமது திறமையை மேலும் கூர்மைப்படுத்தவும், இசை ஆர்வலர்கள் சரியான முறையிலே இரசிக்கும் நிலையை சீர்மைப்படுத்தவும் பலமாக இருந்தது.9(ஈழகேசரி : 19-11-44)

**முடிவுரை**

இந்தவகையிலே ஈழகேசரி பத்திரிகை தனது காலத்திலே இசைக்கலைவளர்ச்சிக்குப் பாடுபட்டதோடு சமூகத்திலே இசைக்கலையானது எல்லோரையும் சென்றடையவேண்டும் என்கின்ற சிறந்த நோக்கத்துடனும் செயற்பட்டிருக்கின்றது என்பதை தெரிந்துகொள்ளமுடிகின்றது. இது மாத்திரமல்லாமல் சமூகத்திலே சிறந்த ஒரு இரசனைமட்டத்தினை வளர்த்தெடுக்கும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு பத்திரிகை தர்மத்திற்கேற்ப செயற்பட்டிருக்கின்றது என்கின்ற முடிவுக்கு வரமுடிகின்றது. இதன் விழைவாக பாடசாலைக்கலைத்திட்டத்திலே இசை ஒரு கட்டாய பாடமாக ஏற்றுக்கொள்ளபட்டவும், அதன்மூலம் சமூகத்தில் அனைவரும் இசைக்கலையைக் கற்கவும் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஒரு பாதையை அமைத்துக்கொடுத்தது என்று சொன்னால் மிகையாகாது.

***அடிக்குறிப்பு :***

1. அருணாசலம் சண்முகதாஸ்.கலாநிதி: ஈழகேசரி பொன்னையா நினைவுப்பேருரை: 1992 :பக் 2,3
2. சிவத்தம்பி. கா. பேராசிரியர்: யாழ்ப்பாணம் சமூகம் பண்பாடு கருத்துநிலை : பக் 42 : 1985
3. ஈழகேசரி : 07-12-47: பக் 3
4. ஈழகேசரி - 17.01.48 : கலாபவனம் கட்டுரை: பக் 4
5. ஈழகேசரி: 6.6.48 : பக் 5
6. ஈழகேசரி : 11.8.46: பக் 3
7. ஈழகேசரி : 5-7-42: பக் 3
8. ஈழகேசரி – 12-7-42 :பக் 6
9. ஈழகேசரி : 19-11-44: பக் 4

***துணை நூற்பட்டியல்:***


1. சாம்பமூர்த்தி. பி.: கர்நாடக சங்கீதம் : பாகம் 3: வெளியீடு : சென்னை: (1963)
2. சிவத்தம்பி. கா. பேராசிரியர் யாழ்ப்பாணம் சமூகம் பண்பாடு கருத்துநிலை :(1985) :
3. கோப்பாய் சிவம்: இலங்கையில் தமிழ்ப்பத்திரிகைகள், சஞ்சிகைகள் (1841 – 1984) கையேடு : (2000)
4. ஈழகேசரி பத்திரிகைகள்.